இந்தப் பிரச்சனையை அவை உரிமைக் குழு ஆய்ந்து அடுத்த கூட்டத் தொடருக்குள் ஒரு அறிக்கை அளிக்க வேண்டும் என்று தெரிவித்து, அக் குழுவிற்கு இப்பிரச்சனையைஅனுப்பி வைக்கிறேன்.

ஆ) மாண்புமிகு சமுகநலத்துறை அமைச்சர்மீது எழுப்பிய உரிமைபிரச்னை மீது பேரவைத் தலைவரின் தீர்ப்பு:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 29-3-1978 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்கள் மீது, ஒரு அமைச்சர் அவைக்கு அரசுத் துறை அலுவலர் ஒருவரால் கொடுக்கப்பட்ட கடிதம் ஒன்றினை படித்ததின் மீது ஒரு உரிமை மீறல் பிரச்சினையை எழுப்பியுள்ளார். இது வேண்டுமென்றே, தான் எழுப்பிய குற்றச்சாட்டிற்கு தனக்கு மாசு கற்பிக்கும் வகையிலும், தான் பேரவை உறுப்பினராக இயங்க இயலாத வகையிலும் இவ்வாறு செய்யப்பெற்றது என்று கூறியுள்ளார். இதன் மீது உறுப்பினரது மற்றும் அரசினது கருத்தைக் கேட்டு பேரவைத் தலைவர் தமது தீர்ப்பை பின்னர் அறிவிப்பார் என்றும் துணைத் தலைவர் அவர்கள் அன்று அவையில் அறிவித்துள்ளார்கள்.

இருதரப்பிலும் எடுத்து வைக்கப்பட்ட கருத்துக்களையும்' அமைச்சர் அவர்கள் 81-வது விதியின் கீழ் அவைக்கு அளித்த அறிக்கையையும், உறுப்பினர் அவர்கள் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினையையும் கூர்ந்து ஆராய்ந்தேன்.

உறுப்பினர் திரு. ரகுமான்கான் முதல் நாள் சுற்றறிக்கையை படித்துக் காட்டியபோது அது துறையில் செய்யப்பட்ட தவறு என்று கூறுது, அது சம்பந்தப்பட்ட அமைச்சரின் கவனத்திற்கு உட்பட்டுத் தான் இவ்வாறுன தவறு நடத்திருக்கிறது என்பதையும் திட்டவட்டமாகக் குற்றம் சாட்டியுள்ளார். மேலும், உரிமைப் பிரச்சினை அறிவிப்பிலும் அமைச்சருக்கு இதுபற்றி, personal knowledge' உள்ளது போலத்தான் எழுதியும் கொடுத்துள்ளார். மேலும் எதிர்க் கட்சித் துணைத் தலைவர் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் தெரிவித்தக் கருத்தையும் கூட ஏற்காது அமைச்சர் பொறுப்பில் அத்துறை இருப்பதினுல் அமைச்சர் அதை விசாரிக்க வேண்டுமென்று கூறுது அமைச்சர் மீது தான் அவர் குற்றம் சாட்டுவதாகவும் திட்டவட்டமாகக் கூறியுள்ளார். ஆனுல், அமைச்சருடைய கவனத்தின்கீழ் தான் இவ்வாருக சுற்றறிக்கை அனுப்பப்பட்டு துறையில் தவறு நடந்திருக்கிறது என்பதற்கு ஆதாரமில்லை,

உறுப்பினர் தனிப்பட்ட முறையில் அமைச்சர் மீது குற்றம் சாட்டியதை அமைச்சர் நல்லெண்ணத்தோடு உடனடியாக சம்பந்தப்பட்ட அலுவலரும் சென்னைக்கு பயிற்சிக்காக வந்திருப்பதால் அந்த அலுவலரிடம் இருந்து துறையின் மூலமாக அவருடைய விளக்கத்தைப் பெற்று அவைக்கும் அதை வாசித்துள்ளார். அமைச்சர் அவர்கள் தன்னுடைய அனுமதியின்பேரில் தான் அந்த சுற்றறிக்கை அனுப்பப்பட்டது என்ற கூற்றினையும் மறுத்துள்ளார்.

ஆனால் அந்த அதிகாரி கொடுத்துள்ள விளக்கத்தில் உறுப்பினரது பெயரும் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ளது. அதைத் தவிர்த்துக் கூட அமைச்சர் அந்த கடிதத்தை வாசித்திருக்கலாம். ஆனால் தனக்குக் கிடைத்த முழுத் தகவலையும் அவையின் முன் வைக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு இது வாசிக்கப்பட்டதால் இதில் உறுப்பினர் மீது வேண்டுமென்றே களங்கம் கற்பிக்க வேண்டுமென்ற முறையில் வாசிக்கப்பட்டது என்று கருதுவதற்கு இடமில்லை.

மேலும் இம்மாதிரி உறுப்பினர் ஒருவரை சம்பந்தப்படுத்தி ஒரு அதிகாரி இவ்வாறு தனது விளக்கத்தை கொடுத்திருப்பது எனக்குத் தெரிந்த வரையில் இது தான் முதல் முறையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இது குறித்து அரசு மேற்கொண்டு புலன் ஆய்வு செய்து முழு விசாரணை செய்யும் என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறியுள்ளபடியால். அவ்வாறு விசாரணை நடத்தி அதனுடைய முடிவை இந்த அவைக்கு அரசு தெரிவிக்கலாம்.

மேலும் நான் ஏற்கனவே ஒரு தீர்ப்பில் கூறியுள்ளவாறு உறுப்பினர்கள் மற்ற உறுப்பினர்கள் மீதோ அல்லது அமைச்சர்கள் மீதோ அவர்களின் அலுவல் சம்பந்தப்படாது தனிப்பட்ட முறையில் அவர்கள் குற்றச்சாட்டுகளைக் கூறும்போது அவற்றிற்கு முழு ஆதாரங்களையும் வைத்து இருக்கவேண்டுமென்றும், சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கோ அல்லது அமைச்சருக்கோ முன்னறிவிப்பு கொடுக்கவேண்டுமென்றும் கூறியுள்ளேன், அவ்வாறு நடைபெறுததன் விளைவு தான், அவை இந்தப் பிரச்சினையில் தனது கருத்தை மீண்டும் ஒரு முறை கவனத்தைச் செலுத்தவேண்டியுள்ளது.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள். உறுப்பினர்களது உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்கப்பட்டது போலவே அமைச்சர்களின் மீதும் வேண்டுமென்றே தவறான குற்றச்சாட்டுக்கள் வராதவாறு பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்றும் தெரிவித்தார்கள்.

எனவே இனிமேல் உறுப்பினர்கள் குற்றச்சாட்டுகளைக் கூறும் போது அவைகள் அமைச்சர்களது அலுவல் பற்றியதாக இருந்தால் கூறுவதில் தவறில்லை. ஆனால் அவ்வாறான குற்றச்சாட்டுகள் அல்லது தவறுகள் அமைச்சர்களுக்குத் தெரிந்துதான் செய்யப் பட்டது என்று ஆதாரம் இன்றி கூறுவது சரியாகாது. அம் மாதிரியே அமைச்சர்களும் ஏதேனும் ஒரு விசாரணையின் விளைவாக அதில் உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டிருந்தால் அதைத் தீர விசாரிக்காது அவைக்குக் கொடுப்பதும் சரியாகாது.

இப்பிரச்சினையைப் பொறுத்த வரையில் உறுப்பினர் எழுப்பி யுள்ளது போன்று எந்தவிதத்திலும் மேலெழுந்தவாரியாகக் கூட உரிமை மீறல் இல்லை என்று எனது தீர்ப்பை அளிக்கிறேன்.

அரசு விசாரணைக்குப் பின் அவைக்கு அதன் முடிவுகளையும் அறிவிக்க வேண்டும்.

4. அறிவிப்பு.

மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன் வடிவுகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் 4—4—1978 ஆம் நாளன்று கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி ஒப்புதல் அளித் துள்ளதாக மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களிட மிருந்து செய்திகள் வரப்பெற்றுள்ளன:

1. தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு மின்சார வாரியம் (நிலுவை களை வசூலித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/78)

2. தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/78).

3. தமிழ்நாடு. 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/78).